# மஹாகவிதை

## கவிதைக் காலாண்டிதழ்

"உண்மையான கவிதை அருமையான திரவியம். அதனால் உலகம் க்ஷேமத்தை அடைகிறது. எந்த நாட்டிலே புதிய மகாகவி தோன்றுகிறானோ, அந்த நாடு மஹாபாக்கியமுடையது. தமிழ்நாட்டிலே கவிதையின் புகழ் ஏறுக"

சி. சுப்பிரமணிய பாரதி

மகாகவி பாரதியாரையே ஞானாசிரியராகக் கொண்டு, அவரது மரபில் மஹாகவிதைகள் தமிழில் தோன்ற வேண்டுமென்ற முயற்சியுடன், உதயமாகிறது ***மஹாகவிதை*** – கவிதைக் காலாண்டிதழ்.

வெளிநாட்டார் வணக்கம் செய்யும் வகையில், இறவாத புகழுடைய புதுநூல்கள் இயற்றியும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் பெயர்த்தும் தமிழின் கவிதையைப் புகழில் ஏற்றும் கவிஞர்களின் ஆக்கங்களைச் சிறப்புற வெளியிடுதலை நோக்கமாகக் கொண்ட இவ்விதழ், இளம்பாரதிகளை இனங்கண்டு ஊக்குவிக்கச் சிறப்புப் பக்கங்களையும் வழங்க விழைகிறது.

உள்ளூர் தொடங்கி உலகம் வரையில் வளர்ந்து வரும் கவிதைகள், கவிதை குறித்த சிந்தனை ஆக்கங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து பதிவு செய்ய விரும்பும் இவ்விதழ்,

அந்தந்தக் காலத் தேவைக்கேற்பப் பொருத்தமான பாரதியார் எழுத்துக்களை, மகுடமாகத் (தலையங்கமாக) தாங்கிவரும்; இதுவரை தொகுப்பேதும் வெளியிட்டிராத 35 வயதுக்குட்பட்ட கவியுளத்தை அடையாளம் கண்டு அறிமுகப்படுத்தும்.

மேலும், பாரதியின்தேவை மற்றும் சிறப்புகள் குறித்த மூத்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள், தமிழ்க்கவிதைகள், இந்திய, மற்றும் அயலக மொழிக்கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் மற்றும் கவிதை குறித்த திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை நூல் அறிமுகம் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றைத் தாங்கிவரும் இவ்விதழ் A4 அளவில், சுமார் 60 பக்கங்களில் வரும் 2013 புத்தாண்டில் வெளிவர இருக்கிறது.

பாரதி மரபில் எதிர்காலக் கவிதையைத் தொடரச்செய்யும் வகையில் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி:


சொ.அருணன், கபிலன் பதிப்பகம்,
321, மூன்றாம் முதன்மைச் சாலை,
மகாவீர் நகர், புதுச்சேரி–605008.


12.12.12

- **ஆசிரியர்குழு**




**ஞானாசிரியர்**
சி.சுப்பிரமணிய பாரதி

**ஆசிரியர் குழு**
இரா.மீனாட்சி
சேதுபதி
இரா.குறிஞ்சிவேந்தன்

**நெறியாளர்கள்**
கவிஞர் சிற்பி
நவபாரதி

**பதிப்பாசிரியர் & வெளியீட்டாளர்**
சொ.அருணன்
கபிலன் பதிப்பகம்
321, மூன்றாம் முதன்மைச் சாலை,
மகாவீர் நகர்,
புதுச்சேரி–605008

**தொடர்புகளுக்கு...**
9442379558
9443190440
9629662507

**மின்அஞ்சல்**
mahaakavithai@gmail.com